மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்

5

தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வினாத்தாள் -2025

வினாத்தாள் -1

ஒரு மணித்தியாலம்

சுட்டெண்.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை
- இவ்வினாத்தாளிலேயே எழுதுக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது கோட்டினை மாத்திரம் இடுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களின் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

01)

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
இரண்டாவது பரிட்சகர் முதலாது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T/EMF
பிரதானபரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புளிகள் சரியாகும்.	
	V/I/T/CH

www.ikeu.lk

நாட்டின் எப்பாகத்திலிருந்தும்
கற்பித்தல் அனுபவம் உள்ள திறமையான ஆசிரியர்களிடம்
கல்வி கற்க விரும்புகிறீர்களா

இதோ உங்களுக்கான அரிய சந்தர்ப்பம்

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk || www.lkedu.lk

76667-4945

Learn Easy கல்வி நிலையத்தில் நிகழ்நிலையாக

zoom Online class

76667-4945

அனைத்து வகுப்புகளுக்குமான அனுமதிக்கட்டணம் இலவசம்

Mobile	076667-4945
WhatsApp	+94 76667-4945
Viber	+94 76667-4945
Email	learneasy.lk@gmail.com
Web	www.learneasy.lk

FB Page - https://www.facebook.com/learneasylk


வகுப்புக்கள் தொடர்பான மேலதிக தகவல்களை
மேலுள்ள இலக்கத்திற்கு
WhatsApp செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்

01) தரப்பட்ட நிகழ்விற்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




1. பாடசாலை செல்லும் மாணவனைப் பார்த்து நாய் குரைக்கிறது.
2. ஒரு பறவை மரத்தில் அமர்ந்திருக்க மூன்று பறவைகள் வானில் பறக்கின்றன.
3. பாடசாலை விட்டு வீடு வரும் சிறுவனை செல்லப்பிராணிகள் வரவேற்கின்றன.

02) தரப்படும் வாகனங்களை சிறப்பான இரண்டு கூட்டங்களாக வேறுபடுத்தும் முறை.




1. A, C உம் BDE உம் 2. A, C,E உம் BD உம் 3. A,B, E உம் CD உம்

03) எந்தப் பிராணி வளைவான பாதையூடாகச் சென்று பூக்களில் உள்ள தேனைக் குடிக்கும்.




1. வண்ணத்துப் பூச்சி
2. குளவி
3. தேனீ

04) கீழே உள்ள உருக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்து வேறுபட்டுள்ளது. அவ்வுருவை தெரிவு செய்க.



1 2 3

05) எண்கள் இடப்பட்ட கோலத்தை அவதானித்து இடைவெளிக்கு வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.



1. 39 2. 16 3. 49

www.lkedulk

06) தரப்பட்டுள்ள மரபுத் தொடருக்குப் பொருத்தமான கருத்தினைத் தெரிவு செய்க.

நாக்கு நீளுதல்

1. முடியாத செயலைச் செய்தல்
2. அடக்கமின்றிப் பேசுதல்
3. பொய்கூறல்

07)  இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?

1. 16
2. 8
3. 12

- **கீழுள்ள பந்தியை வாசித்து 8,9ம் வினாக்களுக்கு விடை தருக.**

நான் எனது பாடசாலை நண்பர்களுடன் ஆற்றங்கரைக்குச் சென்றேன். நாங்கள் அனைவரும் படகில் ஏறி அதை ஆற்றின் நடுவிற்குக் கொண்டு சென்றோம். சற்று நேரத்தின் பின் ஆற்று நீரின் வேகம் அதிகரித்து படகு அங்குமிங்குமாக அலை மோதத் தொடங்கியது. அதே நேரத்தில் சுழன்று கொண்டிருந்த படகு கவிழ்ந்ததுடன் கட்டிலிலிருந்த எனது கண்கள் திறந்து கொண்டன.


08) மேலுள்ள பந்தியில் கூறப்பட்டுள்ள விடயம்.

1. வெள்ளப்பெருக்கினால் ஏற்பட்ட விபத்து
2. மறக்கமுடியாத நிகழ்வு
3. நான் கண்ட கனவு

09) இப்பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களைக் கூறுபவர்.

1. படகோட்டி
2. மாணவன்
3. மீனவன்

10) முதல் இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்று வைக்கும் போது கிடைக்கும் கிடைக்கும் உருவைத் தெரிவுசெய்க.



11) ரியாஸ் தன்னிடமுள்ள பணத்தில் ½ பங்கை புத்தகம் வாங்க செலவழித்தான். எஞ்சியதில் ½ பங்கை முஹம்மட்டுக்கு கொடுத்தான். இப்போது எஞ்சிய பணம் ரூபாய் 600.00 எனின் ஆரம்பத்தில் இருந்த பணம் எவ்வளவு?

1. ரூ. 3000.00
2. ரூ. 2400.00
3. ரூ. 2600.00

12) ஒரு பையில் 6 நீல நிறப் பந்துகளும் 8 மஞ்சள் நிறப் பந்துகளும் உள்ளன. பந்துகளைப் பார்க்காமல் ஒரு நீல நிறப் பந்தினைப் பெற்று கொள்வதற்கு பையிலிருந்து ஆகக் குறைந்த எண்ணிக்கையான எத்தனை பந்துகளை வெளியே எடுக்க வேண்டும்?

1. 7
2. 8
3. 9

13) ஒலிம்பிக் போட்டிகள் 4வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். 2016 இல் 31வது ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது எனின் 35ஆவது ஒலிம்பிக்போட்டி எந்த வருடம் நடைபெறும்?

1. 2020
2. 2032
3. 2028

www.ikedu.lk

14) கோலத்தை இனங்கண்டு இடைவெளிக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

2	3	1	6
4	.....	3	24
2	3	.....	30
16	18	15	


1. 3 , 4
2. 5 , 3
3. 2 , 5


15) முபீன் ஏணியொன்றில் 6 வது இடத்தில் இருக்கின்றார். மேலும் 4 படி மேலே சென்ற பிறகு ஏணியில் சரி நடுவில் நிற்பார். எனின் ஏணியிலுள்ள மொத்த படிகள் எத்தனை ?


1. 19 2. 20 3. 21

16) பின்வரும் அடைப்பில் உள்ளவைகளை மிகவும் அர்த்தமுள்ள விதத்தில் காட்டியுள்ள உருவது?

A	2	இ	E
I	அ	O	உ
	1		3

1. 

2. 

3. 


17) முஹம்மட், அதீப் , தான்யா, சமீம் ஆகியோர் நான்கு பிள்ளைகளாவர். முஹம்மட் தான்யாவிலும் மூத்தவரும் அதீபிலும் இளையவரும் ஆவார். சமீம் தான்யாவிலும் மூத்தவரும் முஹம்மட்டில் இளையவரும் ஆவார். இதற்கேற்ப மூத்தபிள்ளையும் இளைய பிள்ளையும் முறையே யாவர்?

1. அதீப் , சமீம் 2. அதீப் , தான்யா 3. முஹம்மட் , அதீப்


18) 10 ஒத்த இயந்திரங்கள் 10 நிமிடங்களில் 10 சக்கரங்களைத் தயாரிக்கும். எனின் 100 சக்கரங்களைத் தயாரிக்க 10 இயந்திரங்களுக்கு எத்தனை நிமிடங்கள் எடுக்கும்?

1. 10 நிமிடங்கள் 2. 20 நிமிடங்கள் 3. 100 நிமிடங்கள்

19) மூன்று வாக்கியப் பகுதிகளும் அவற்றுக்குரிய மூன்று குறியீட்டுக் கோவைகளும் கீழே தரப்பட்டுள்ளன.



அதற்கேற்ப " **வெள்ளைப் பசு துள்ளி ஓடும்** " என்னும் வாக்கியப் பகுதிக்குரிய குறியீட்டுக் கோவை யாது?




1 2 3

www.ikeou.lk



20) நேரான பாதை ஒன்றில் 6m தூரத்திற்கு சீரான இடைவெளியில் நடுவதற்கு 7 தூண்கள் தேவை. 18m தூரத்திற்கு அதே சீரான இடைவெளியில் பாதையின் இரு பக்கங்களுக்கும் தூண்கள் நடுவதற்கு எத்தனை தூண்கள் தேவை ?

1. 36 கம்புகள் 2. 18 கம்புகள் 3. 38 கம்புகள்

21) முற்பக்கத்திலிருந்து பார்க்கும் போது படம் தோன்றும் விதம் கீழே தரப்பட்டுள்ளது.




அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்க்கும் போது அது தோன்றும் விதத்தைக் காட்டும் படம் யாது?




1.  2.  3. 

22) நீங்கள் வாங்கி வந்த வானொலியில் உருக்கள் தெரியாததனால், அதனைக் கடையில் கொடுத்துவிட்டு உருக்கள் தெரியும் வானொலியொன்றை வாங்கி வரும்படி பாட்டி கூறினாள். இக் கூற்று தவறானது என்பதற்கு நீங்கள் கூறும் காரணம் யாது?

1. உருக்கள் தெரியும் வானொலி விலை கூடியது என்பதால்
2. வானொலியானது கட்புல சாதனமல்ல அது செவிப்புல சாதனமென்பதால்.
3. உருக்கள் தெரியும் வானொலிக்கு மக்கள் விருப்பம் இன்மை என்பதால்

23) 

இந்த உருவில் காட்டப்பட்டுள்ள அட்டைப் பெட்டியைச் செய்வதற்கு பயன்படுத்தப் பட்ட அட்டைத் தாள் துண்டைத் தெரிவு செய்க.

1.  2.  3. 

24) ஒரு சதுரமுகியின் ஆறு முகங்களில் ஒரு முகத்தில் ஓர் இலக்கம் வீதம் 1 தொடக்கம் 6 வரையான இலக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறு இலக்கங்கள் எழுதப்பட்டுள்ள இரு சதுர முகிகளை மேசை மீது வைக்கும் போது மேசையுடன் தொடுகையுறாத முகங்களில் உள்ள இலக்கங்களின் கூட்டுத் தொகை 32 ஆகும். மேசையுடன் தொடுகையுறும் இருமுகங்களில் உள்ள எண்களின் கூட்டுத் தொகை யாது?

1. 12 2. 10 3. 18

25) சுற்றுலா ஒன்றில் 180 மாணவர்கள் பங்குபற்றினர். இவர்கள் 9 மாணவர்களுக்கு ஒரு தலைவர் என்ற வகையில் குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். எனின் பிரிக்கப்பட்ட குழுக்களின் எண்ணிக்கை எத்தனை?

1. 18 2. 20 3. 19

www.lkedu.lk

26) பின்வரும் பாடலடியின் ஒழுங்கினைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க?

A – புதிய தேனை உண்ணவே

B – பூக்கள் மீது கும்பலாய்

C - இன்னும் தூக்கம் ஏனடா?

D - ஈக்கள் கூடும் அழகுபார்.

1. ABDC 2. BADC 3. BDAC


27) N ஆனது ஓர் ஈரிலக்க எண்ணாகும். அதன் இரு இலக்கங்களினதும் பெருக்கம் 8 ஆகும்.N உடன் 18 ஐக் கூட்டும் போது விடையாக அமையும் எண் N இன் இலக்கங்களை மாற்றும் போது கிடைக்கும் எண்ணாகும். N இன் பெறுமதி யாது?

1. 24 2. 18 3. 42


28) கிறீஸ் பூசப்பட்ட வழுக்கு மரம் ஒன்றில் ஒருவன் ஒரு பாய்ச்சலில் 3 அடிகள் ஏற 2 அடிகள் சறுக்கி கீழே வருவான். 10 அடிகள் உயரமான மரத்தின் உச்சியைத் தொட எத்தனை பாய்ச்சல்கள் தேவைப்படும்?

1. 4 2. 8 3. 9


29) கூடுதலான பிரதேசம் நிழற்றப்பட்ட உரு எது?



1.




2.



3.

30) இத் தராசின் இரு தட்டுக்களும் சமனாக இருப்பின் பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க




1. பொதி A இனதும் பொதி B இனதும் நிறை சமமாகும்.
2. பொதி A ஆனது பொதி B இலும் நிறை கூடியது.
3. பொதி B ஆனது பொதி A இலும் நிறை கூடியது.


31)



கடதாசி A யில் இருக்கும் * குறியீட்டின் மீது B யில் இருக்கும் குறியீடு N இருக்குமாறு கடதாசி A மீது கடதாசி B ஐ வைக்கும் போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.


1. 


2. 


3. 


www.ikedu.lk

32) நூலகம் ஒன்றில் அருகே உள்ளவாறு புத்தகங்கள் அடுக்கப்பட்டிருந்தன. அதில் A என்ற புத்தகத்தை எடுத்தபின் அப்புத்தக அடுக்கில் ஏற்படும் மாற்றம் யாது?




1. 

2. 

3. 


33) கடையொன்றில் யோகட் 05 வாங்குகின்ற போது ஒரு யோகட் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது. ஒரு யோகட்டின் விலை ரூபாய் 70.00 ஆகும். அந்தக் கடையில் 18 யோகட் வாங்கிய ஒருவர் கொடுக்க வேண்டிய பணம் எவ்வளவு?

1. ரூபாய் 1050 2. ரூபாய் 1260 3. ரூபாய் 1120

34) 

மாலை நான்கு மணிக்கு X இலிருந்து Y வரை பயணம் செய்து கொண்டிருக்கும் சபீக்கின் நிழல் அவனுக்குப்பின்னால் விழுகிறது. அவன் Y இலிருந்து Z வரை பயணம் செய்யும்போது நிழலானது விழுந்திருப்பது.

1. முன்னால் 2. வலப்பக்கத்தில் 3. இடப்பக்கத்தில்


35) 

அருகில் தரப்பட்டுள்ள திண்ம உருவில் காணப்படும் தட்டையான மேற்பரப்புக்களின் எண்ணிக்கை யாது?

1. 6 2. 8 3. 10

36) 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி சனிக்கிழமை எனின், அம் மாதத்தில் வரும் திங்கட் கிழமைகளின் திகதிகளின் கூட்டுத்தொகைக்கும் சனிக் கிழமைகளின் திகதிகளின் கூட்டுத் தொகைக்கும் இடையே உள்ள வித்தியாசம் எத்தனை?

1. 09 2. 08 3. 46

37) 

ஒரு தோட்டத்தில் தென்னை மரங்களிலும் கூடுதலாக பனை மரங்களும் பனை மரங்களிலும் குறைவாக பலா மரங்களும் , தென்னை மரங்களிலும் கூடுதலாக பலா மரங்களும் உள்ளன. தோட்டத்தில் குறைவாக உள்ள மரம் எது?

1. 

2. 


3. 

www.ikedu.lk

38) இரும்பு ஒட்டும் தொழிற்சாலை ஒன்றில் 2 கம்பிகளைப் பொருத்தி ஒட்டுவதற்கு ரூபாய் 75.00 செலுத்த வேண்டும். 9 கம்பித்துண்டுகளை ஒன்றாகப் பொருத்துவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?

1. ரூ.720
2. ரூ.675
3. ரூ.600


39) உருவிற் காட்டப்பட்டுள்ளவாறு முழுமையாக நீர் நிரம்பிய தாங்கி A இல் இருந்து ஒரு ½ பங்கு அளவு நீர் தாங்கி B இல் இடப்பட்டது. இப்போது B தாங்கியில் 1/4 பகுதியில் நீர் உள்ளது. இவ்வாறு இருப்பதற்கு தாங்கி B கொள்ளும் நீரின் அளவு தாங்கி A கொள்ளும் நீரின் அளவின் எத்தனை மடங்காக இருக்கும்?



1. இருமடங்கு
2. மும்மடங்கு
3. சமம்

40) நகரம் ஒன்றில் அமைந்துள்ள இடங்கள் சிலவற்றின் அமைவிடங்கள் கீழே தரப்பட்டுள்ளது. பள்ளிவாசலில் இருந்து பாடசாலையினூடாக கடையைக் கடந்து வீட்டிற்குச் சென்று மீண்டும் பொலிஸ் நிலையத்திற்கு வரும் ஒருவர் செல்ல வேண்டிய மொத்தத் தூரம் யாது?

1. 28 km
2. 32 km
3. 30 km



www.lkedu.lk

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்
மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம்

5

தேர்ச்சி மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட மாதிரி வினாத்தாள் -2025

வினாத்தாள் -II

1மணி 15 நிமிடங்கள்

சுட்டெண்.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை
- இவ்வினாத்தாளிலேயே எழுதுக. (சில வினாக்களுக்கு உப பகுதிகள் உள்ளன)
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- விடையின் கீழ் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது கோட்டினை மாத்திரம் இடுக.
- நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களின் விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T
இரண்டாவது பரிட்சகர் முதலாது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	
	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	
	V/I/T/EMF
பிரதானபரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	
	V/I/T/CH

www.iketi.lk

LEARN EASY
KNOWLEDGE IS POWER

அழையுங்கள் :
76667-4945



zoom

எப்பாத்திலிருந்தும்
இணையலாம்



தரம் 1
தொடக்கம்

தரம் 5
வரை

- பாடத் தெரிவுகள் செய்ய முடியாது.
- சகல பாடங்களுக்குமான மாதக்கட்டணம்
- அனைத்து பாடங்களுக்குமான recording வழங்கப்படும்.

நுண்ணறிவு
வினாத்தாள்
(பகுதி 1, பகுதி 2)

Spoken English

தமிழ்
கணிதம்
சுற்றாடல்
ஆங்கிலம்
சிங்களம்

01) பின்வரும் உரைப்பகுதியை வாசிக்குக.

இலங்கையின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது இந்த அழகிய குன்று. பெரிய சிங்கம் ஒன்று தனது முன்னங்கால்களை ஊன்றி அமர்ந்திருப்பது போல் தோற்றம் அளிக்கிறது. நுழைவாயிலில் இருந்து உள்ளே சென்றால் இருமருங்கிலும் அடர்ந்த மரங்கள் பரவியிருக்க அதன் அருகே விட்டுவிட்டுச் செவ்வக வடிவிலான நீர்தேக்கங்கள் நீண்டிருக்க, நட்டநடுவே சீகிரியாக் குன்று. குன்றின் உச்சியில் காணப்படும் நீர்த்தடாகங்கள் உச்சியிலிருந்து சுற்றி வரப் பார்க்கும் போது எங்கும் பச்சைப் பசேல் எனக் காட்சியளிக்கும் காடுகள், கோட்டையைச் சுற்றி ஆழ்ந்த அகழி சூழ்ந்திருக்க, குன்றின் மேலே உள்ள குகைக்குள் கோட்டை அமைத்த தாது சேனனின் மூத்த மகனான காசியப்ப மன்னனைப் பாராட்டியே ஆக வேண்டும்.

- **உரைப்பகுதியைக் கருத்தில் கொண்டு விடை எழுதுக.**

1. சீகிரியாக் குன்று எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

   .....

2. சீகிரியாக் குன்று எவ்வாறு தோற்றமளிக்கின்றது?

   .....

   .....

3. குன்றின் உச்சியில் காணப்படுபவை எவை?

   .....

4. கோட்டையைச் சுற்றி பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருப்பது எது?

   .....

5. நுழைவாயில் என்பதைப் பிரித்து எழுதுக.

   .....

6. இப்பந்தியில் தரப்பட்டுள்ள அடுக்கிடுக்குத் தொடர் யாது?

   .....

7. இக்குன்றை வடிவமைத்த மன்னன் யார்?

   .....

02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திற்கும் சரியான பயனிலையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. பூனைக் குட்டி முன்னே ..... (சென்றன / சென்றது)
2. மல்லிகைப் பந்தலில் பூக்கள் .....(மலர்ந்திருந்தன. /மலர்ந்திருந்தது)
3. நானும் நண்பனும் நூலகத்திற்குச் .....(செல்கின்றோம் / செல்கின்றேன்)

03) பின்வரும் வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் நண்பனைப் பார்த்துச் சிரித்தேன்.

   .....

2. அவர் போகும் வழியில் முள் காணப்பட்டது.

   .....

www.lkedu.lk

04) கீழே தரப்பட்டுள்ள தனிச் சொற்களுக்குரிய தொடர் மொழியை எழுதுக.

1. போலி : .....
2. முகவுரை : .....

05) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான இணைமொழியைத் தெரிவு செய்து வெற்றிடங்களைப் பூர்த்தி செய்க.

(பேரும் புகழும் , அருமை பெருமை , ஆடிப்பாடி , சுகதுக்கம்)

1. ..... வேலை செய்தால் அலுப்பிருக்காது.
2. அவரது ..... உலகமெங்கும் பரவியது.
3. பிறரின் ..... அறிந்து அவற்றில் நாமும் பங்கு கொள்ள வேண்டும்.

06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் பிழையான எழுத்துக் கூட்டல் உள்ள **இரண்டு** சொற்கள் உள்ளன. **அந்தச் சொற்களை மட்டும் பிழை திருத்தி** புள்ளிக் கோட்டில் எழுதுக.

1. நிலவு மகல் தன் கடமையை முடித்து நானத்துடன் ஒளிந்து கொள்கிறாள்.

   .....

2. பன்டிகைக் காலங்களில் தான தறுமம் வழங்க வேண்டும்.

   .....

07) பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்கு படுத்தி வாக்கியத்தை மீண்டும் எழுதுக.

1. பெற்ற / இவ்வையகம் / யாம் / பெறுக / இன்பம்

   .....

2. பஹிமா / வெட்டினாள் / கத்தரிக்கோல் / கடதாசியை / கொண்டு

   .....

08) பின்வரும் வாக்கியத்தில் உரிய இடங்களில் பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

அரசே எம்மிடம் படைப்பலம் குறைவாக உள்ளதே என்றான் தளபதி

09) பின்வரும் வாக்கியங்கள் தன்மையா, முன்னிலையா, படர்க்கையா என எழுதுக.


1. அவர்கள் வருவார்களா? .....
2. நாங்கள் பாடம் படித்தோம். .....
3. நீ வாழ்க .....


10) பொருத்தமான இளமைப் பெயரைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

1. கிளிப் ..... கீக்கீ என்று கத்தியது.
2. யானையின் ..... முன்னே சென்றது.

www.lkedu.lk

11) பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கலச் சொல்லை தரப்பட்டுள்ள கட்டத்திற்குள் ஆங்கிலத்தில் எழுதுக.





12) கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி ஆங்கிலத்தில் எழுதுக.

1. cant / I / play / cricket

.....

2. is / my /This / book

.....

13) பின்வரும் படத்திற்குப் பொருத்தமான சிங்களச் சொல்லைத் தமிழில் எழுதுக.



.....



.....

14) தரப்பட்டுள்ள சிங்கள வாக்கியத்தின் கருத்தை தமிழில் எழுதுக.

கிரவா மொன பாட்டத? .....

15) பின்வரும் எண்ணின் எண்பெயரை எழுதுக

9258 - .....

16) எண் **6785** இல் இலக்கம் **7** இன் இடத்தையும் இலக்கம் **8** இனால் வகைக் குறிக்கப்படும் பெறுமானத்தையும் எழுதுக.


.....

17) பின்வரும் அடைப்பிலிருந்து ஐந்து எண்களைத் தெரிவு செய்து பொது வித்தியாசம் 3 ஆகவுள்ள ஓர் எண்கோலத்தை வெற்றிடத்தில் எழுதுக.

15	**3**	**9**
	6	**10**
12		**2**

....


18) 209 மாதுளம் பழங்களில் 14 மாதுளம் பழங்கள் பழுதடைந்ததால் அதை நீக்கி விட்டு மீதிப்பழங்கள் மூன்று குவியல்களாகப் பிரிக்கப்பட்டன. அதன் படி ஒரு குவியலில் உள்ள மாதுளம் பழங்கள் எத்தனை? .....

19) 

இத் திண்ம உருவில் காணப்படும் உச்சிகளினதும் விளிம்புகளினதும் மொத்த எண்ணிக்கை யாது? .....


www.lkedu.lk

20) .ஒரு வியாபாரியிடமிருந்த வெள்ளை, மஞ்சள், நீலம் சிவப்பு நிறத்திலான தொப்பிகளின் எண்ணிக்கையை வரைபு காட்டுகின்றது. அதன்படி வினவப்பட்டுள்ள வினாக்களுக்கான விடையைத் தருக?



1. வியாபாரியிடமிருந்த தொப்பிகளின் எண்ணிக்கை 80 எனின் நீல நிறத் தொப்பிகளின் எண்ணிக்கையை வரைபிற் காட்டுக?
2. இங்குள்ள சம எண்ணிக்கையிலான தொப்பிகள் எவை?

.....


21) 

பென்சிலின் நீளத்தை சென்றிமீற்றரில் தருக.

.....

22) பின்வரும் நேரத்தைக் கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.

மூன்று கடந்து ஐம்பத்தைந்து நிமிடம்



23) வடிகால் A யின் நீளம் 43km ஆகும் . வடிகால் B யின் நீளம் 87km 400m ஆகும். வடிகால் B யின் நீளம் A யின் நீளத்திலும் பார்க்க எவ்வளவினால் கூடியது?

.....

24) ஒரு பாத்திரத்தில் இருந்த நீரின் அளவு 5 லீற்றர் 725 மில்லி லீற்றர் ஆகும் அதனுள்ளே மேலும் 2 லீற்றர் 170 மில்லி லீற்றர் நீர் சேர்க்கப்பட்டது. இப்போது பாத்திரத்தில் உள்ள நீரின் மொத்த அளவு யாது? .....

25) 

1. உருவில் நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியில் 3/8 ஐ நிழற்றுக.
2. இப்போது நிழற்றப்படாமல் எஞ்சியுள்ள பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.

.....

26) ஒரு தேயிலைப் பைக்கற்றில் 2kg 250g தேயிலை உள்ளது. அவ்வாறான 3 பைக்கற்றுக்களில் உள்ள தேயிலையின் மொத்த நிறை யாது?

: .....

27) ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற எடுத்த காலம் 3 மணித்தியாலம் 15 நிமிடங்களாகும். அது பிற்பகல் 5.45 இற்கு முடிவடைந்தது எனின் கலை நிகழ்வு ஆரம்பித்த நேரம் யாது?

.....

www.lkedu.lk

28) சுதேஸ் வீட்டிலிருந்து 100m வடக்கு திசை நோக்கி சென்று அங்கிருந்து கிழக்கு திசையில் 100m சென்று பாடசாலையை அடைந்தான். அவன் பாடசாலையிலிருந்து வீட்டிற்கு அதே பாதையில் வரும் போது எப்பக்கம் திரும்ப நேரிடும்?

.....

29)

பொருள்	அளவு	விலை
பென்சில்	02	50.00
பேனை	01	35.00
அடிமட்டம்	03	120.00
கத்தரிகோல்	01	75.00

சிட்டையில் உள்ள அனைத்து பொருட்களையும் வாங்கிய மஞ்சுளா கடைக்காரரிடம் ரூபாய் 500 கொடுத்தாள் எனின் அவளுக்கு கிடைத்த மீதிப் பணம் யாது? .....

- **30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

30) மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடுகளில் ''திடசித்தம்'' எனும் படிமுறையில் நாம் கொள்ளும் உறுதிகளுள் ஒன்று

1. முழு உலகையும் என்னால் வெற்றி பெறமுடியும்.
2. எனது வகுப்பிற்கும் பாடசாலைக்கும் வீட்டிற்கும் நான் ஒளியாவேன்.
3. எனது உள்ளம் அமைதியுறுவதால் கிடைக்கும் நிம்மதியை உணரட்டும்.

31)



உருவில் தரப்பட்டுள்ள விளையாட்டு

1. தாயம் போடுதல் 2. றபான் அடித்தல் 3. பல்லாங்குழி

32) பின்வருவனவற்றுள் தனது வதிவிடத்தை தன்னால் அமைத்துக் கொள்ள முடியாதவை

1. அணில், கறையான் 2. எலி, சிட்டுக்குருவி 3.பாம்பு, குயில்

33) நீரிழிவு நோய் ஏற்படக் காரணமாக அமையும் உணவுப்பழக்கமாக கருதப்படக் கூடியது

1. கீரை வகைகளைப் பச்சையாக உண்ணல் 2. புரத உணவுகளை அதிகமாக உண்ணல்
3. இனிப்புக்களை அதிகமாக உண்ணல்

34) கடந்த காலங்களில் எமது நாட்டை ஆட்சி செய்த வெளிநாட்டவர்களை ஒழுங்கு முறையாகக் காட்டும் விடை எது?

1. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் 2. ஒல்லாந்தர், ஆங்கிலேயர், போர்த்துக்கேயர்
3. ஆங்கிலேயர், ஒல்லாந்தர், போர்த்துக்கேயர்

35) உணவு உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்று

1. உணவு உண்ணும் போது அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு உண்ணுதல்.
2. மற்றையவர்களின் உணவுப் பாத்திரங்களை எட்டிப் பார்த்தல்.
3. உணவை விழுங்குவதற்கு முன்னர் போதியளவில் அதனை மெல்லுதல்

36) முற்காலத்தில் அரிசியை மாவாக்கப் பயன்பட்ட கருவி?

1. திருகைக் கல் 2. உரல் உலக்கை 3. ஆட்டுக்கல்

www.lkedu.lk

37) நூலகம் ஒன்றினுள் வெளிக்காட்டக் கூடிய சரியான நடத்தை

1. சத்தமாகப்பேசி ஏனையோருக்கு இடைஞ்சல் விளைவித்தல்
2. வாசிக்கும் புத்தகங்களில் பல்வேறு அடையாளங்களை இடுதல்.
3. வாசித்த பின் புத்தகங்களை உரிய இடங்களில் வைத்தல்.

38) தரமற்ற பொருள் தொடர்பான முறைப்பாட்டை யாருக்குத் தெரிவிக்க வேண்டும்?

1. உற்பத்தியாளருக்கு 2. நுகர்வோர் பாதுகாப்பு சபைக்கு 3. சுகாதார திணைக்களம்

39) வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கை வட்டத்தை சரியாக காட்டும் தொகுதி?

1. நிறையுடலி. குடம்பி, முட்டை, கூட்டுப்புழு 2. நிறையுடலி, முட்டை, கூட்டுப்புழு, குடம்பி
3. முட்டை, குடம்பி, கூட்டுப்புழு, நிறையுடலி

40) இலங்கையில் உள்ள உலக மரபுரிமைகளில் ஒன்று

1. திருகோணமலைத் துறைமுகம் 2. திரிபீடகம் 3. மத்திய மலைப்பகுதிகள்

41) சங்கிலியுடன் பெரிய பற்சில்லு, சிறிய பற்சில்லு என்பன இணைக்கப்பட்டு இயங்கும் உபகரணம்.

1. மின்காந்தம் 2. துவிச்சக்கர வண்டி 3. தைனமோ

42) முண்டத்தை நிமிர்த்தி வைத்து கைவிரல்களை மடித்து தொடைகளில் தொடுமாறு கால்களை அருகருகே V வடிவில் வைத்து சமநிலையாக நிற்கும் சந்தர்ப்பம்.

1. அணிநடையின் போது 2. தேசியகீதம் இசைக்கும்போது 3. பாடசாலை ஒன்றுகூடலின் போது

43) துளசி இலைகளை எரித்துப் புகையூட்டல் செய்வது.

1. வீட்டுத்தோட்டப் பூச்சிகளை விரட்ட 2. நுளம்புகளை விரட்ட 3. கரப்பான்களை விரட்ட

44) **ஒளிச் சமிக்ஞை** மாதிரியை ஆக்குவதற்கு முக்கியமாக தேவைப்படும் பொருட்கள் இரண்டு.

1. பலகைத்துண்டு , பெற்றரி 2. உலர் மின்கலம் , சிறிய மின்குமிழ் 3. இரும்பாணி , குண்டூசி

45) எமது நாட்டிற்கு உரித்தான நகருயிரிகளுள் அடங்குவது.


1. கொம்பு ஓணான் 2. உடும்பு 3. ஆமை

46) பிராணிகளுக்கு இழப்பை ஏற்படுத்தும் மனித செயற்பாடாக அமைவது?

1. பழமரங்களை நடுதல் 2. வீட்டுத்தோட்டம் செய்தல் 3. காடுகளை எரித்தல்

47) டெங்கு நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குப் பின்பற்றக் கூடிய நடைமுறையொன்று

1. கொதித்தாறிய நீரைப் பருகுதல். 2. சூழவுள்ள சுற்றாடலைச் சுத்தப்படுத்தல்
3. மரக்கறிகளைக் கூடுதலாக உட்கொள்ளல்

48) 

இந்நீர்ப் பாத்திரத்தில் A யிலும் B யிலும் இருக்கத்தக்கவை முறையே

1. மரத்துண்டு, நாணயம் 2. மரத்துண்டு, பிளாத்திக்துண்டு 3. இரும்புத்துண்டு, மரத்துண்டு


49) **"புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே – கட்டுவலை எடுத்துக்கிட்டுப் புறப்படுவோமே"** என்னும் பாடல்

1. வண்டிப் பாடல் 2. மீனவர் பாடல் 3. கும்மிப் பாடல்

50) நிலநடுக்கத்தின் போது ஒருவர் தன்னைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது.

1. இருக்கும் இடத்திலேயே இருத்தல் 2. உயரமான கட்டடத்திற்குச் செல்லல்
3. திறந்த வெளிக்குச் செல்லல்

www.ikedu.lk

51)  உருவில் உள்ள தையல் முறை எதற்குமிக உகந்தது ?

1. கிழிந்த உடையைத் தைப்பதற்கு 2. தெறியோட்டையைத் தைப்பதற்கு

3. உடையின் கரையைத் தைப்பதற்கு

52) பொன்னொச்சி, புன்னை, காசித்தும்பை எனும் வித்துவகைகள் பரம்பலடைவது முறையே

1. கதிர் வெடித்தல், நீர், காற்று 2. காற்று, நீர் , கதிர்வெடித்தல் 3. காற்று, விலங்கு, நீர்


53) உடலை நோயிலிருந்து பாதுகாப்பதில் பங்களிப்புச் செய்யும் உணவுப் பொருட்களின் கூட்டம்

1.இறைச்சி, கருவாடு, பாசிப்பயறு 2. பலாக்காய், மீன், பருப்பு 3. பசளி, அன்னாசிப்பழம், வெண்டி

54) புரதக்குறைபாட்டினாலும் விற்றமின் A குறைபாட்டினாலும் ஏற்படும் நோய்கள் முறையே.

1. மரஸ்மஸ் , மாலைக்கண் 2. குவாசியக்கோர், குருதிச் சோகை 3. மரஸ்மஸ் , என்புறுக்கி

55) ABC ஆகிய பாத்திரங்களில் ஒரே அளவான கறிஉப்பை இடும் போது எப்பாத்திரத்தில் உள்ள கறியுப்பு விரைவாகக் கரையும்.



56) படகமுவ வனம் அமையப் பெற்றுள்ள மாவட்டம் எது?

1. குருணாகல் 2.அனுராதபுரம் 3. பொலன்னறுவை

57) ‘‘வானிலிருந்து விழும் ஒரு துளி நீரையும் விவசாயத்திற்கு பயன்படுத்தாது வீணே கடலைச் சென்றடைய விடமாட்டேன்’’ என குறிப்பிட்ட மன்னன் யார்?

1. தேவநம்பியதீஸன் 2. தாதுசேனன் 3. பராக்கிரமபாகு

58) எல்லா இலங்கை நாணயத் தாள்களிலும் காணப்படும் ஒரு பொது இயல்பு,

1. நிறைகுடத்தின் உருவம் காணப்படல். 2. நீர்வீழ்ச்சியின் உருவம் காணப்படல்.

3. இலங்கை மத்திய வங்கி எனக் குறிப்பிடப்பட்டிருத்தல்.

59) கும்மி, கரகம், கோலாட்டம் என்பன,

1. கிராமிய நடனங்கள் 2. கிராமிய விளையாட்டுக்கள் 3. சர்வதேச விளையாட்டுக்கள்

60) ‘‘**காலைப் பொழுதின் அழகு**’’ என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும் . எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்)

1. .....

.....

2. .....

.....

3. .....

.....

www.ikedu.lk